**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 15/2023**

**2024 ம் வருடம் நவம்பர் மாதம் 26 ம் நாள் செவ்வாய்கிழமை**

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு. பொன்ராம்குமார் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | த/பெ | ராஜன்புஸ்பவனம் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. ஈட்டுக்கடன் பத்திரம் அசல் வா.சா.ஆ.1
2. பொது அதிகார ஆவணம் அசல் வா.சா.ஆ.2
3. தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் வா.சா.ஆ.3
4. வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4
5. திருப்பப்பட்ட அஞ்சல் உறை அசல் வா.சா.ஆ.5
6. வில்லங்க சான்று அசல் வா.சா.ஆ.6

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

வழக்குரைஞர் வேண்டுகோளின்படி வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

மானாமதுரை